[1978 செப்டம்பர் 13

'அண்ணு' 'பெரியார்' கப்பல்கள்.

*வினு எண் 190— திரு. சின்னசேலம் மா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 'அண்ணு', 'பெரியார்' என்ற இரு கப்பல்களை தமிழ்நாடு அரசு என்ன விலைக்கு வாங்கியது ?

(ஆ) அதைப் பழுது பார்க்க எவ்வளவு செலவாயிற்று ?

(இ) அதன் மூலம் கிடைத்த லாபம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 'எம். வி. தமிழ் அண்ணு' கப்பல் சுமார் ரூ. 109 லட்சத்திற்கும், 'எம். வி. தமிழ் பெரியார்' என்ற கப்பல் ரூ. 75 லட்சத்திற்கும் வாங்கப்பட்டன.

(ஆ) இரு கப்பல்களையும் பழுது பார்ப்பதற்கான செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆண்டு.	எம்.வி. தமிழ் அண்ணுவிற்கு ஆன செலவு.	எம்.வி. தமிழ் பெரியாருக்கு ஆன செலவு.
(1)	(2)	(3)
1974-75	25,01,428	6,96,020
1975-76	5,19,497	9,48,622
1976-77	27,40,688	8,11,637
1977-78	4,61,340	5,12,802

மேலே குறிப்பிட்ட செலவுகளைத் தவிர, ரூ. 53,02,625 எம். வி. தமிழ் பெரியாருக்கு சிறப்பு மதிப்பீட்டாய்வின் (special survey) அடிப்படையில் பழுது பார்க்க செலவிடப்பட்டது.

(இ) 1975 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதியுடன் முடிந்த ஆண்டில் வருமான வரி விதிகளின்படி தேய்மான செலவுகளுக்கு நிதி ஒதுக்கிய பிறகு, மொத்தத்தில் ரூ. 21·90 இலட்சம் இழப்பு ஏற்பட்டது.

1976 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் தேதியுடன் முடிந்த ஓர் ஆண்டில் தேய்மான செலவுகளுக்காக ரூ. 31·18 இலட்சம் நிதி ஒதுக்கிய பின்னரும் ரூ. 5·29 இலட்சம் நிகர லாபம் கிட்டியது,

1977 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் தேதியுடன் முடிந்த ஆண்டில், தேய்மான செலவுகளுக்காக ரூ. 31·24 இலட்சம் ஒதுக்கிய பின்னர், ரூ. 60·37 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டது.

1978 செப்டம்பர் 13]

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு கப்பல்களும் யாரிடமிருந்து வாங்கப் பட்டன? அவைகளை வாங்கியதற்குப் பிறகு லட்சக்கணக்கான ரூபாய் பழுது பார்ப்பதற்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 109 லட்சம் ரூபாய்க்கு வாங்கி 25 லட்சம் ரூபாய் பழுது பார்ப் பதற்காகவே செலவு செய்யப்பட்டிருக்கிறதே, எனவே யாரிட மிருந்து என்ன நோக்கத்திலே இவை வாங்கப்பட்டன? வாங்கிய நோக்கம் நிறைவேறியதா? இந்தக் கப்பல்களின் மூலமாக ஆண்டுக்கு ஆகும் செலவு எவ்வளவு? ஆண்டுக்கு இவைகளின் மூலமாக வருகின்ற வருமானம் எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, செலவு, வருமானம் பற்றிக் கூறிவிட்டேன். இவைகள் வாங்கப் பட்டதன் நோக்கம், தமிழ்நாடு மின்சார வாரியம் எண்ணூர், பேஸின்பிரிட்ஜ் மின்நிலையத்திற்குத் தேவையான பெங்கால், பீகார் பகுதியிலே இருந்து நிலக்கரியை எடுத்து வருவதற்காக வாங்கப்பட்டது. அப்போது ரயில்வே வேகன்கள் இல்லாத காரணத்தாலே தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உடனடியாக நிலக்கரி தேவைப்பட்டதாலும் எதிர்காலத்திலே தூத்துக்குடி அனல் மின்நிலையத்திற்கு பயன்படுத்தப்படவும் 1974 ஆம் ஆண்டிலே வாங்கப்பட்டன.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து அந்தக் கப்பல் கம்பெனி நட்டத்தில் தான் வேலை செய்கிறதே தவிர லாபத்தில் வேலை செய்யவில்லை, நட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிற கப்பலை விற்பதற்கு அல்லது அதைத் தீர்த்துக் கட்டுவதற்காவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அந்தக் கப்பல்கள் தொடர்ந்து நட்டத்தில் ஓடவில்லை, 1976 ஆம் ஆண்டிலே 5 லட்சம் ரூபாய் லாபத்தில் ஓடியிருக்கிறது. ஆனால் மத்திய அரசினுடைய சில நடைமுறைகள் காரணமாக இந்தக் கப்பல்களுக்குப் போதுமான சரக்குகள் கிட்டாத நிலைமை ஏற்பட்டது.

[முற்பகல் 9-40]

தமிழ்நாடு மின் வாரியத்திற்குச் சொந்தமான எண்ணூர் பேசின்பிரிட்ஜ் மின் நிலையங்கள் பெங்கால், பீகார் நிலக்கரி சுரங்கங்களுடன் இணைக்கப்பட்டிருந்தன, மத்திய அரசு மாற்றி சந்தாவிலுள்ள நிலக்கரி சுரங்கங்களுடன் இணைத்தது. இக்கப்பல் களைத் தொடர்ந்து நிலக்கரி எடுத்து வருவதற்காகப் பயன் படுத்தியதில் நஷ்டம் ஏற்பட்டது. இந்தக் கப்பல் தானியங்களை ஏற்றிக்கொண்டு வந்த பொழுது உராய்வு ஏற்பட்டதன் அடிப் படையில் செலவு சற்று மிகையாக ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்தின் கொள்கையினுல் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது என்று அமைச்சரவர்கள் கூறினுர்கள். இது கப்பல் போக்குவரத்துத் துறை என்பதால் கமர்ஷியல் அன்டர்டேக்கிங் என்று எண்ணு கிறேன், எனவே எங்கே இலாபம் கிடைக்கிறதோ அந்தத் திசையை நோக்கி அந்தத் தொழிலை நடத்திஞல் மத்திய அரசாங்கத்தின் மீது பழி போடும் சூழ்நிலை ஏற்படாது. இருந்தாலும் இப்பொழுது வரும் நிலைமைகளைப் பார்க்கும்பொழுது நான் ஒன்றை அமைச்ச ரிடம் கேட்க விரும்புகிறேன். இதை வாங்கும்பொழுது பழைய கப்பலாக வாங்கப்பட்டதா அல்லது புதிய கப்பலாக வாங்கப் பட்டதா? பழைய கப்பலாக வாங்கப்பட்டது என்ருல் புதிய கப்பல் கிடைக்காத சூழ்நிலை இருந்ததா? இதை வாங்கும்பொழுது டென்டர் அல்லது கொடேஷன்கள் கேட்டு வாங்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்தக் கப்பல்களை வேறு பணிகளுக்குப் பயன்படுத்திஞல் இலாபத் தில் நடக்கும் என்று சொன்ஞர்கள். அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி கொண்டு வரப்பட்டது. மற்றவைகளுக்கு இதைப் பயன் படுத்தக் கூடிய அமைப்பு அதில் இல்லாததால் பெங்கால், பீகாரில் உள்ள நிலக்கரி தரமான நிலக்கரி என்பதால் அது தமிழ்நாட்டில் எண்ணூர், பேசின்பிரிட்ஜ் மின் நிலையத்திற்கும், தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கும் தரப்பட்டால் பணி சிறப்பாக இருக்கும் என்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டு, இப்பொழுதுதான், பெங்கால், பீகார் நிலக்கரியைக் கேட்டு, இசைந்துள்ளார்கள்.

புதிதாக வாங்க வேண்டுமென்ருல் 1974ம் ஆண்டில் ரூபாய் 5 கோடி முதல் 6 கோடிவரை ஆகியிருக்கும். சரக்குக் கட்டணம் மிகவும் குறைவான பொருளான நிலக்கரியை ஏற்றி வருவது மட்டுமே முக்கிய குறிக்கோளாய் இருந்தால், புதிய கப்பல் வாங்க உத்தேசிக்கப்படவில்லை. கப்பல் வாணிபத்தில் டெண்டர்கள் விட்டு, கப்பல் வாங்கும் முறை வழக்கத்தில் இல்லை. கப்பல் விற்பனையும், வாங்குதலும், தரகர்களின் மூலமே நடைபெறுவது வழக்கமாயுள்ளது. 'பெரியார்' கப்பல் புதுடெல்லி யிலிருக்கும் இண்டர் ஓஷியன் தரகர்களின் (Inter-Ocean Brokers of New Delhi) மூலமும், 'அண்ணு' கப்பல் கல்கத்தா விலுள்ள சிங்க்ளேர் (Sinclair) நிறுவனத்தின் மூலமும் வாங்கப் பட்டன.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கப்பல் வாங்கியதன் நோக்கம் நிலக்கரியை ஏற்றிவர என்று குறிப்பிட்டார்கள். அப்படி நிலக்கரியை ஏற்ற முடிய வில்லை என்ருல் சட்டமன்ற உறுப்பினர்களையாவது அந்தக் கப்பலில் ஏற்றி சிங்கப்பூர், மலேசியா போன்ற இடங்களைக் காட்டிக்கொண்டு வர அரசிடம் திட்டமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே' சட்ட மன்ற உறுப்பினர்கள் உல்லாசப் பயணம் செய்ய எனத் தனியாக உல்லாசப் படகுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.